செய்தி வெளியீடு எண்: 140 நாள்: 21.02.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் – திருவட்டார் மற்றும் கிள்ளியூர், விருதுநகர் மாவட்டம் – வத்திராயிருப்பு, திண்டுக்கல் மாவட்டம் – குஜிலியம்பாறை, திருவள்ளூர் மாவட்டம் – ஆர்.கே. பேட்டை ஆகிய புதிய வருவாய் வட்டங்களை துவக்கி வைத்தார்கள். மேலும், விருதுநகர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 11 கோடியே 87 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மக்களை தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

கன்னியாகுமரி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வருவாய் வட்டத்தை பிரித்து செருப்பாலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட திருவட்டார் வருவாய் வட்டம், விளவங்கோடு வருவாய் வட்டத்தை பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட கிள்ளியூர் வருவாய் வட்டம்; விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வருவாய் வட்டத்தை பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட வத்திராயிருப்பு வருவாய் வட்டம்; திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வருவாய் வட்டத்தைப் பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட குஜிலியம்பாறை வருவாய் வட்டம்;

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தைப் பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட ஆர்.கே. பேட்டை வருவாய் வட்டம் ஆகிய ஐந்து புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 2 கோடியே 7 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்பு, வேம்பக்கோட்டையில் 2 கோடியே 61 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு; விழுப்புரம் மாவட்டம், மரக்காணம், கண்டாச்சிபுரம் மற்றும் மேல்மலையனூர் ஆகிய இடங்களில் 7 கோடியே 17 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.என்.தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2019**